இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை; நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன். ஆகவே நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார். நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்புகொள்ள வேண்டும் என்பதே என் கட்டளை." (யோவான் 15:16-17)

# 55-ம் ஆண்டு உலக தொலைத்தொடர்பு தினம்

# திருத்தந்தையின் செய்தி (சுருக்கம்)

## 'வந்து பாருங்கள்' (யோவான் 1:46)

சீடர்களுடன் இயேசுவின் முதல் சந்திப்பின் ஒரு பகுதியாக இருந்த "வந்து பாருங்கள்" என்ற அழைப்பு அனைத்து மனிதகுலத்துக்குமான தொடர்புகளுக்கும் ஏற்றதாக அமைகிறது. நாம் மக்களைச் சென்றுப் பார்க்க வேண்டும், மக்களுடன் நேரத்தை செலவிட வேண்டும், அவர்களின் கதைகளைக் கேட்க வேண்டும், உண்மை நிலையை எதிர்கொள்ள வேண்டும். அப்போது, நாம் ஏதோ ஒருவகையில் ஆச்சரியத்துக்குள்ளாவோம்.

இந்த ஆண்டு, உலக தொலைத்தொடர்பு தினத்திற்கான எனது செய்தியை "வந்து பாருங்கள்" என்ற அழைப்பிற்கு அர்ப்பணிக்க விரும்புகிறேன். இது தெளிவாகவும் நேர்மையாகவும் இருக்க முயற்சிக்கும் அனைத்து தகவல் தொடர்புகளுக்கும் குறிப்பாக, பத்திரிகை களுக்கு, இணையத்தலங்களுக்கு, திருஅவையின் மறையுரைகளுக்கு மற்றும் அரசியல் மற்றும் சமூக தொடர்பு சாதனங்களுக்கு ஓர் உந்துதலாக அமையும்.

செய்தி அறிக்கைகளில் காணப்படும் பெரிய சிக்கலை முதலில் பார்ப்போம். செய்தித்தாள்கள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் வலைத்தல செய்தி ஒளிபரப்புகளில் அசல் புலனாய்வு அறிக்கைகள் பின்னர் ஒரு அறிக்கையால் மாற்றப்படும் அபாயத்தைப் பற்றிய கவலை நம்மில் உண்டு.

இத்தகைய அணுகுமுறையினால். உண்மை யையும் மக்களின் உறுதியான வாழ்க்கை யையும் புரிந்து கொள்ளும் திறன் குறைவாகவும் உள்ளது. அடிமட்டத்தில் உள்ள சமூக இயக்கங்கள் உணர்த்தும் உண்மை. தெருக்களில் காணும் உண்மை நிலவரங்கள், நேருக்கு நேர் சந்திப்பதால் கிட்டும் ஆய்வுகள் போன்றவை கனிணிகளில் முடங்கிக் கிடக்கமால் மக்களை வந்தடைய வேண்டும்.

யோர்தான் நதியில் திருமுழுக்கைத் தொடர்ந்து, அவரைப் பற்றி அறிந்திட ஆர்வமாக இருந்த சீடர்களிடம் இயேசு பேசிய முதல் வார்த்தைகள் "வந்து பாருங்கள்" (யோவான் 1:39). அரை நூற்றாண்டுக்கு மேலாக, முதிர்ந்த வயதில் யோவான் தனது நற்செய்தியை எழுதியபோது, இயேசுவின் அழைப்பை




நினைவுகூர்ந்து எழுதினார்.

"வந்து பாருங்கள்" என்பது ஒரு சூழ்நிலையை அறிந்து கொள்வதற்கான எளிய முறையாகும். இது ஒவ்வொரு செய்தியையும் புரிந்துகொள்ள மிக நேர்மையான வழிமுறையாகும். ஏனென் றால், தெரிந்துகொள்ள, நாம் எதையும் எதிர்கொள்ள வேண்டும், எனக்கு முன்னால் இருப்பவரை பேச அனுமதிக்க வேண்டும், அவருடைய சாட்சியம் கேட்பவரை ஆட்கொள்ள வேண்டும்.

பத்திரிக்கை துறையும், வேறு யாரும் செல்ல நினைக்காத இடத்திற்குச் செல்லும் திறனைக் கோருகிறது. எங்கும் எப்போதும் புறப்பட ஒரு தயார்நிலையை எதிர் பார்க்கிறது. பத்திரிகையாளர்கள், ஒளிப்பதிவாளர்கள், தொகுப்பாளர்கள், இயக்குநர்கள் - தங்கள் வேலையைச் செய்வதில் தங்கள் உயிரைப் பணயம் வைக்கும் அனைவரின் தைரியம் மற்றும் அர்ப்பணிப்புக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

உதாரணமாக, உலகின் பல்வேறு பகுதிகளிலும் துன்புறுத்தப்பட்ட சிறுபான்மை யினரால் அனுபவிக்கப்பட்ட கஷ்டங்கள், ஏழைகள் மற்றும் சுற்றுச்சூழல் மீது ஏற்படுத்தப்பட்ட ஏராளமான அடக்குமுறை அநீதிகள் மற்றும் பல போர்கள் கவனிக்கப்படாமல் இருப்பதைப் பற்றி இப்போது நாம் அறிவோம். இவற்றை வெளி உலகிற்கு அடையாளம் காட்டு பவர்கள் பத்திரக்கையாளர்கள். நம் உலகில் எந்தவொரு பகுதுயிலும் தொற்று நோய் பரவியுள்ள இந்த காலத்தில் தகவல்தொடர்பு ஊடகங்களை "வந்து பார்க்க" அழைக்கிறது. இது ஆபத்தை உள்ளடக்கிய செயலுமாகும்.

இணையத்தால், அதன் எண்ணற்ற சமூக ஊடக வெளிப்பாடுகளுடன், அறிக்கையிடல் மற்றும் பகிர்வுக்கான திறனை அதிகரிக்க முடியும், மேலும் உலகத்தைப் பற்றிய செய்திகளை எண்ணற்றவர் படங்கள் மற்றும் சாட்சியங்கள் வாயிலாக உண்மை நிலையைப் புரிந்துகொள்ள இணையத்தால் உதவ முடியும். அதே வேளையில், இலக்கியல் தொழில்நுட்பம் சரியான நேரத்தில் தகவல்களை உடனுக்குடன் வழங்கும் வாய்ப்பை நமக்கு வழங்குகிறன, இது பெரும்பாலும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.. இலக்கியல் தொழில்நுட்பம் என்பது ஒரு சக்திவாய்ந்த கருவியாகும், இதற்கு பயனீட்டாளர்கள் மற்றும் நுகர்வோர் என நம் அனைவரும் பொறுப்பேற்க அழைக்கிறது.

தகவல் தொடர்புகளில், சம்பவங்களை நேரில் பார்ப்பதை விட வேறு எதுவும் முழுமையாக எடுத்துரைக்க இயலாது. சில அனுபவங்கள் முதல் அனுபவ அனுபவத்தின் மூலம் மட்டுமே கற்றுக்கொள்ள முடியும். "வந்து பாருங்கள்" என்ற அழைப்பை ஏற்றுக்கொண்ட ஆண்களும் பெண்களும் நேருக்கு நேர், இதயத்துக்கு இதயம் என ஏற்பட்ட சந்திப்புகளின் விளைவாகத்தான் நற்செய்தி உலகம் முழுவதும் பரவியது. அப்படியானால், நமக்காக் காத்திருக்கும் சவால், மக்களை எங்கிருக்கிறார்களோ, அங்கே அவர்களை எதிர்கொள்வதன் மூலம் தொடரபுகொள்வது சிறப்பாகும்.

“ஆண்டவரே.உலகில் நீங்கள் வசிக்கும் இடங்களை அடையாளம் காணும் அருளை எங்களுக்கு வழங்குவாராக. நாங்கள் பார்த்ததை மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டிய நேர்மை உள்த்தை எங்களுக்கு அருள்வீராக.

திருத்தந்தை பிரான்சிஸ்

# கோலாலம்பூர் மாமறைமாவட்ட பேராயர் அலுவலக அறிக்கை

**சிலாங்கூர் மாநிலம் மற்றும் கோலாலம்பூர் ஆகிய பகுதிகளில் பொது திருப்பலி கொண்டாட்டங்களுக்குத் தற்காலிகத் தடை**

சிலாங்கூர் மாநிலத்தில் 6 மாவட்டங்களிலும் கோலா-லம்பூர் கூட்டரசு பிரதேசத்திலும் மே மாதம் 6-ம் திகதி முதல் பொது நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை (எம்.சி.ஓ) பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இப்குதிகளில் முஸ்லீம் அல்லாத வழிபாட்டுத் தலங்களில் வழிபாட்டு நடவடிக்கைகளை இந்த ஆணை அனுமதித்தாலும்; மருத்துவமனையிலும் அவரசர சிகிச்சை பிரிவுகளிலும் தேவைப்படும் படுக்கைகள் பற்றாக்குறையின் காரணத்தை முன்னிட்டும் கிள்ளான் பள்ளத்தாக்கில் அதிகபட்ச நெருக்கடி நிலை ஏற்பட்டு வருவதால், பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் தொற்றுநோயின் பாதிப்பு வீகிதம் அதிகரிக்கும் சூழலில் ஆழந்த கவலையைத் தெரிவித்துள்ளார்.

1.மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்துத் தடையுத்தரவு அமுலாக்கத்தில் உள்ளபடியால் ஆலயங்களுக்குச் செல்வது இயலாத ஒன்று என்பதாலும், மாமறைமாவட்டத்தின் நெருக்கடி மேலாண்மை பணிக்குழுவின் ஆலோசனையின் பேரில் சிலாங்கூர் மற்றும் கோலாலம்பூர் பகுதிகளில் உள்ள அனைத்து பங்குகளிலும் வருகிற வெள்ளிக்கிழமை, 7, மே 2021 தொடங்கி அடுத்த அறிவிப்பு வரை பொதுத் திருப்பலிகள் அனைத்தும் தடை செய்யப்படுவதாகப் பேராயர் அறிவித்துள்ளார்.

2.கீழ்க்கண்ட கூடுதலான பாதுகாப்பு நடவடிக்கள் பின்பற்றப்பட வேண்டும்.

2.1 **ஆலய அலுவலகங்கள்**: பங்குத் தந்தையின் பரிந்துரையின் பேரில், கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் ஆலய அலுவலகங்கள் திறக்கப்படலாம், எ.கா. குறுகிய பணி நேரம், ஊழியர்களிடையே பணி நேர மாற்றம், நேரடி சந்திப்புகள் அற்ற நடவடிக்கைகள்.

**2.2 திருமணங்கள்**
ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்கள் திட்டமிட்டப்படி தொடரலாம். ஆனாலும் அருள்பணியாளர், தம்பதிகள், சாட்சியர் உட்பட கலந்துகொள்வேரின் மொத்த எண்ணிக்கை 30 (முப்பது) பேருக்கு மேல் இருக்க்கக் கூடாது.

## திருமண அன்பு 'இழிவானதைச் செய்யாது'

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட 'அன்பின் மகிழ்வு' திருத்தூது அறிவுரை மடலில், 'திருமணத்தில் அன்பு' என்ற 4ம் பிரிவில், புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமடலின் 13-ம் பிரிவில் அன்பு குறித்து எடுத்துரைப்பவைகளை முதலில் விளக்கியுள்ளார். அதில், அன்பு இழிவானதைச் செய்யாது', என்ற பண்பு குறித்து, 99, மற்றும் 100ம் பத்திகளில் திருத்தந்தை கூறியுள்ள எண்ணங்களின் சுருக்கம் பின்வருமாறு.

அன்பு கூர்வது என்பது கனிவாக, சாந்தமாக இருப்பதையும், அது முரட்டுத்தனமானதல்ல, நயமற்றதல்ல என்பதையும் குறிக்கிறது. இதன் வார்த்தைகளும், செய்கைகளும், செயல்பாடுகளும், மரியாதையற்றவைகள் அல்ல, அதேவேளை, மற்றவர்களுக்கு துன்பம் விளைவிப்பதிலிருந்து விலகி நிற்பவையும்கூட. பணிவன்பாகிய இது, பிறருக்கு செவிமடுப்பதற்கும், பிறருடன் கனிவாக பேசவும், தேவைப்படும்போது அமைதி காக்கவும் நம் மனதையும், உணர்வுகளையும் புடமிடுவதற்குக் கற்றுத்தருகிறது. நம்மைச் சுற்றியிருக்கும் ஒவ்வொருவருடனும் இசைவுடன் வாழ, அன்பு நம்மிடம் எதிர்பார்க்கின்றது. இதற்கு, ஒவ்வொரு நாளும் மற்றவர்கள் மீதான நம்பிக்கையும், மதிப்பும் புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது. நம் அன்பு எவ்வளவு ஆழமானதோ, அந்த அளவுக்கு, மற்றவர்களின் சுதந்திரத்தை மதிக்கவும், அவர்கள் நமக்காக தங்கள் இதயக் கதவுகளைத் திறக்கும்வரை காத்திருக்கவும் அழைப்பு விடுக்கிறது. (அன்பின் மகிழ்வு 99)

மற்றவர்களுடன் மேற்கொள்ளப்படும் நேர்மையான சந்திப்பில், மனம்திறந்து செயல்பட, 'கனிவான பார்வை' அத்தியாவசியமானது. நம் குறைபாடுகளைக் கண்டுகொள்ளாமல், மற்றவர்களின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் மனநிலைக்கு இது எதிரானது. நமக்குள் இருக்கும் வேறுபாடுகளையும் தாண்டி, மற்றவர்களுடன் ஒத்துழைத்து, அவர்களுடன் பொறுமையுடன் செயல்பட, இந்த கனிவான பார்வை நமக்கு உதவுகிறது. இரக்கமுள்ள அன்பு, பிணைப்புகளை கட்டியெழுப்புவதுடன், உறவுகளை வளர்த்து, ஒருங்கிணைப்பில் புதிய தொடர்புகளை உருவாக்கி, ஓர் உறுதியான சமுதாய கட்டுமானத்தைப் பின்னுகிறது. இதன் வழியாக, அன்பு மேலும் பலப்படுகின்றது. ஏனெனில், நாமும் சமுதாயத்தின் ஒரு பகுதி என்ற உணர்வில்லாமல், நம்மால், மற்றவர்களுக்கு நம்மை அர்ப்பணிக்க முடியாது. மற்றவர்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்று வதற்காகவே வாழ்கிறார்கள் என, சமுதாய விரோதிகள், சுயநலமாக எண்ணுகின்றனர்.

அப்படிப்பட்ட எண்ணங்கள் இருக்கும் சூழல்களில், கனிவான அன்புக்கும், அதன் வெளிப்பாடுகளுக்கும், இடமில்லை. அன்புகூர்பவர்கள், ஆறுதலின், பலத்தின், ஊக்கத்தின் வார்த்தைகளை எடுத்துரைக்க வல்லவர்கள். "மகனே, துணிவோடிரு" (மத் 9:2); "உமது நம்பிக்கை பெரிது" (மத் 15:28); "எழுந்திடு" (மாற் 5:41); "அமைதியுடன் செல்க" (லூக் 7:50); "அஞ்சாதீர்கள்" (மத் 14:27), என்பவை, இயேசு தன் வாழ்வில் பயன்படுத்திய வார்த்தைகள். நம் குடும்பங்களிலும் ஒருவர் ஒருவரோடு உரையாடும்போது, இயேசுவின் இந்த கனிவான வார்த்தைகளை பயன்படுத்த கற்றுக்கொள்வோம். (அன்பின் மகிழ்வு 100)

-ஆர்.கே.

## பேராயர் அலுவலக அறிக்கை (முதல் பக்கத் தொடர்ச்சி)

2.3 **இறப்புத் திருப்பலி:** ஆலய வளாகத்தில் உள்ள இறப்பு பிரேத கூடங்கள் (Parlours ) திறக்கப்படலாம். ஆனாலும் சமூக இறைவேண்டல் வழிபாடு மேற்கொள்ள இயலாது. (வேண்டும்மானால் zoom வாயிலாக மேற்கொள்ளலாம்) இறப்பு பிரேத கூடங்களில் தனிநபர்களின் இறைவேண்டலில் ஒரு நேரத்தில் 5 பேர் மட்டுமே கலந்துகொள்ள அனுமதி உண்டு. இறப்பு திருப்பலியில் 30 பேர் மட்டுமே கலந்து கொள்ள முடியும். வருகையாளர்களும் குடும்ப உறுப்பினர்களும் முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டும்.

2.4 **திருமுழுக்கு:** திருமுழுக்குக் கொண்டாட்டங்கள் அனைத்தும் (அவசர தேவை தவிரத்து) மற்றொரு காலத்துக்கு ஒத்திவைக்கப்பட வேண்டும்.

2.5 **நோயிற் பூசுதல்:** அவசர தேவைக்கு மட்டுமே நோயிற் பூசுதலுக்கு அனுமதி உண்டு. இல்லத்தில் நற்கருணை வழங்கும் பணி அடுத்த அறிவிப்பு வரை தடை செய்யப்படுகிறது.

2.6 **ஒப்புரவு:** பாவ மன்னிப்பு தேவைக்குத் தனிப்பட்ட முறையில் பங்கு தந்தையுடன் தொடர்பு கொள்ளலாம்.

2.7 பொதுத் திருப்பலிகள் தொடர்ந்து இயங்கலை (online) வாயிலாக பல பங்குகள் ஏற்பாட்டில் கொண்டாடப்படும். மாமறைமாவட்டத்தின் TV.ArchKL.org இணைப்பின் வழி தொடர்பு கொள்ளலாம். திருப்பலிகளை நேரடி ஒலிபரப்பு செய்யும் பங்குகள் திருப்பலியின் போது 10 (பத்து) பணியாளர்களுக்கு மேல் கொண்டிருக்கக் கூடாது. பேராயர் இக்காலக்கட்டத்தில் திருப்பலியில் கடன் நாளாகப்




பங்கெடுப்பதிலிருந்து விடுப்பு அனுமதி அளித்துள்ளார்.

3.0 இதர மாநிலங்களான, நெகிரி செம்பிலான், பகாங் மற்றும் திரெங்கானு ஆகிய மாநிலங்களில் வழக்கம் போல் பொதுத் திருப்பலிகள் கொண்டாடப்படும்.

நமது திருத்தந்தை பிரான்சிஸ் இந்த தொற்றுநோயை முடிவுக்குக் கொண்டுவர இறைவேண்டல் செய்யும்படி நம்மை பணித்துள்ளார். இந்த மே மாதத்தில், செபமாலை இறைவேண்டலில் அன்னை மரியாவின் பரிந்துரையோடு, கடவுளின் உதவியை நாடுவதில் இடைவிடாமல் ஒன்றிணைவோம்.

இப்படிக்கு,

அருள்தந்தை மைக்கல் சுவா
பேராயர் அலுவலக செயலர்

### 'பெருந்தொற்றால் காயம்பட்ட உலகம் முழுமைக்கும்' செபமாலை

உலகெங்கும் பரவியுள்ள கோவிட்-19 பெருந்தொற்று முடிவுக்கு வரவேண்டும் என்ற வேண்டுதலுடன், மே மாதம் முழுவதும், உலகின் அனைத்து திருத்தலங்களிலும், செபமாலை பக்தி முயற்சி மேற்கொள்ளப்படும்வேளை, மே மாதத்தின் முதல் நாளான இச்சனிக்கிழமை, உரோம் நேரம் மாலை 6 மணிக்கு, வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவிலில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இப்பக்தி முயற்சியை துவக்கி வைத்தார்.



### 10-வது குடும்பங்கள் உலக மாநாட்டிற்கு இறைவேண்டல்

**2022-ம் ஆண்டு ஜூன் மாதம் 22ம் தேதி முதல், 26ம் தேதி வரை, உரோம் மாநகரில் நடைபெறவிருக்கும், பத்தாவது குடும்பங்கள் உலக மாநாட்டிற்குத் தயாரிப்பாகச் சொல்லப்படும் இறைவேண்டலை, பொதுநிலையினர், குடும்பம், மற்றும், வாழ்வு திருப்பீட அவையும், உரோம் மறைமாவட்டமும் இணைந்து வெளியிட்டுள்ளன.**

## நிலையான அன்பில் நிலைத்திருப்போம்

பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிற்றுக் கிழமையான இன்று இடம்பெறும் வாசகங்கள் கடவுள் நம்மீது கொண்டிருக்கின்ற அன்பையும், நாம் ஒருவர் மற்றவரிடம் எத்தகைய அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதையும் நமக்கு எடுத்துக்கூறுகின்றன.

ஆண்டவர் இயேசு இந்த உலகத்தினை விட்டுப் போவதற்கு முன்பாக பல செய்திகளை தன்னுடைய சீடர்களுக்கு எடுத்துச் சொன்னார். அதில் முக்கியமான ஒரு செய்திதான் இயேசு சீடர்கள்மீதும், இந்த உலகின்மீதும் கொண்ட அன்பாகும். இயேசு நம்மீது எத்துணை ஆழமான அன்பு கொண்டிருக்கின்றார் என்பது நம்முடைய சிந்தனைக்குரியதாக இருக்கின்றது.

இயேசு கூறுகின்றார் "என் தந்தை என்மீது அன்புகொண்டுள்ளது போல நானும் உங்கள்மீது அன்பு கொண்டுள்ளேன்" என்று. தந்தையாம் கடவுள் இயேசுவின் மீதுகொண்ட அன்பை வார்த்தைகளால் விவரித்துச் சொல்லமுடியாது. ஏனென்றால், இயேசு தந்தையாம் கடவுளுக்கு அன்பார்ந்த மகனாக இருந்திருக்கின்றார் என்று விவிலியம் நமக்குச் சான்று பகர்கின்றது (மத் 17:5).

இயேசு நம்மீது கொண்ட அன்பு எத்தகையது என்று இப்போது பார்ப்போம். முதலாவதாக, இயேசு நம்மீது கொண்ட அன்பு ஓர் உயிர் நண்பன் நம்மீது கொள்ளும் அன்பிற்கு இணையானதாக இருக்கின்றது.

இரண்டாவதாக இயேசுவின் அன்பு பாரபட்சம் பார்க்காத அன்பாக இருக்கின்றது. இயேசு எல்லா மனிதர்கள் வழியாகவும் செயல்படுகின்றார், அன்பு எல்லாருக்கும் உண்டு, அவருடைய அன்பில் பாரபட்சம் இல்லை என்பதை நாம் மிகத் தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

மூன்றாவதாக இயேசுவின் அன்பு மன்னிக்கின்ற அன்பாக இருக்கின்றது. விவிலியத்தில் வருகின்ற பல நிகழ்வுகள் அவருடைய மன்னிக்கும் அன்பிற்கு சான்றாக இருக்கின்றன.

பல நேரங்களில் நாம் நம் அருகில் வாழ்பவர்கள் மீது அன்பு காட்டாமல், கண்டும் காணாத வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றோம், இன்னும் சொல்லப்போனால், நமக்குத் தீங்கு செய்பவர்களை பழிக்கு பழி வாங்கத் துடிக்கின்றோம். இயேசு அப்படி தீமை செய்தவர்களுக்கு பதிலுக்கு தீமை செய்யவில்லை, அவர்களை மன்னித்து அன்பு செய்தார். இயேசுவின் வழியில் நடக்கும் நாம் ஒவ்வொருவரும் தேவையில் இருப்பவர்களைக் கவனித்துக் கொள்கின்ற போதும், தீங்கு செய்பவர்களுக்குக் நன்மை செய்கின்றபோதும்தான் அவருடைய அன்புக்குப் பாத்திரமானவர்களாக இருக்க முடியும்.

இயேசு சொல்வது போன்று எல்லாரையும் அன்பு செய்கின்றபோது இறைவன் நமக்கு எத்தகைய கைம்மாறு தருவார் என்பதை இன்றைய இரண்டாம் வாசகம் சுட்டிக்காட்டுகிறது. "அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள்; அவர்கள் கடவுளை அறிந்துள்ளார்கள்" என்கிறார் தூய யோவான். . நாம் அன்பு செலுத்தும்போது கடவுளை அறிந்தவர்களாக மட்டுமல்லாமல், கடவுளின் மக்களாகின்றோம் என்கிறார். இன்று எத்தனை பேர் தங்களுடைய நண்பர்கள் நன்றாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றார்கள் என்று தெரியவில்லை! ஆனால், இயேசு தம் நண்பர்கள் அதாவது, சீடர்கள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்று விரும்புகின்றார். அதற்காக அவர்களுக்கு அன்புக் கட்டளையைக் கொடுக்கின்றார்.

எமர்சன் என்ற அறிஞர் இவ்வாறு கூறுவார்: "நாமே நண்பராக இருப்பதுதான் நண்பரைச் சம்பாதிக்க ஒரே வழி." என்கிறார். இயேசு நல்ல நண்பராக இருந்தார் மட்டுமல்லாது தன் நண்பர்கள் மகிழ்ந்திருக்க அன்புக் கட்டளை கொடுத்தார். நாமும் இயேசுவைப் போன்று நல்ல நண்பர்களாக இருப்போம். மாற்றத்தைக் கண்டு மாறாத அன்பே உண்மை அன்பு.

*-ஆவி.டேவிட், குளுவாங்*

**பாஸ்கா காலம் 6-ஆம் ஞாயிறு**
திப: 10: 25-26, 34-35, 44-48
திபா: 98: 1. 2-3ab. 3cd-4
1 யோவான் 4: 7-10
யோவான்: 15: 9-17
**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**

**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : வாரம் 2**